கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும்; அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) ஆராய்ச்சி, அபிவிருத்தி, கல்வி, பயிற்சி மற்றும் விசாலித்தலை முன்னெடுத்துச் செல்வதற்காக பிரயோகப் புள்ளிவிபரவியலின் ஊக்குவிப்பை மேம்படுத்தலும் அதற்கு உதவுதலும் ;

(ஆ) ஆராய்ச்சி பணியாளர்களின் பயிற்சியை ஊக்குவிப்பதற்கு "பிரயோகப் புள்ளி விபரவியல் பற்றிய இலங்கைச் சஞ்சிகை" என்ற தலைப்பைக் கொண்ட சஞ்சிகையில் பிரயோகப் புள்ளிவிபரவியல் பற்றிய கருத்தரங்குகள், விரிவுரைகள் மற்றும் கட்டுரைகளை வெளியிடுவதன் மூலம் பிரயோகப் புள்ளிவிபரவியல் தொடர்பான பயனுள்ள தகவலைத் தயார்படுத்துதல், வெளியிடுதல் மற்றும் பரப்புதலைப் பொறுப்பேற்றலும் ஒருங்கிணைத்தலும் ;

(இ) தேர்வாய்வு நுட்பங்கள், புள்ளிவிபரவியல் முறைகள் மற்றும் தரவுப் பகுப்பாய்வு என்பவற்றை முன்னேற்றும் நோக்கத்துடன் புள்ளிவிபரவியல் இடப்பரப்பிலுள்ள ஆராய்ச்சியைப் பொறுப்பேற்றல் ;

(ஈ) குறுகிய கால கற்கைநெறிகள், சான்றிதழ் கற்கை நெறிகள் மற்றும் டிப்ளோமா கற்கை நெறிகள் என்பவற்றை நடாத்துதலும் கூட்டுத்தாபனத்தின் தரப்பட்டுள்ள விதிகளுக்கான தேவைப்பாடுகளை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதற்கான சான்றிதழ்கள், டிப்புளோமாக்களை வழங்குதல் ;

